**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**STC No.1050/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Ravichandran | Prosecution | PW1 Cross |
| Father Name | Kaliyaperumal | Defence | |
| Village | 54, Kadukkamaram, | Taluk | Sirkali |
| District | Mayiladuthurai | Age | 57/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day

**25.08.2025. எதிரி ஆஜர்**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

**1.** நான் எவ்வளவு படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய சொந்த ஊர் எது என்றால் கடுக்காமரம் என்பதாகும். எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவருடைய அப்பா காலத்தில் இருந்து அவர் பழக்கம். எதிரியின் அப்பாவும் எனக்கு தெரிந்தவர்தான். எதிரி தற்போது எங்கு குடி இருக்கிறார் என்றால் சிதம்பரம் கோவில் தெற்கு வீதியில் குடி இருக்கிறார். நான் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கில் சொல்லி உள்ள கடனை நான் வட்டிக்கு கொடுக்கவில்லை என புகாரில் சொல்லி உள்ளேன் என்றால் நான் இந்த கடனை ஒரு பைசா வட்டிக்கு தான் கொடுத்தேன். வட்டி தொழில் செய்வதற்கு நான் முறையான உரிமம் வைத்துள்ளேனா என்றால் நான் வட்டி தொழில் செய்யவில்லை. எதிரி குடும்ப நண்பர் என்பதால் உதவி செய்யும் நோக்கத்தில் பணம் கொடுத்தேன். நான் வட்டி தொழில் செய்யவில்லை என்பதால் என்னிடம் வட்டி தொழில் செய்ய அனுமதி இல்லை.

3. ரூ.21,00,000/- எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் நிலையில் அந்தத் தொகைக்கு உண்டான வருமான வரி நான் செலுத்தி உள்ளேன் என்றால் செலுத்தவில்லை. ஏனெனில் அந்தப் பணம் என்னுடைய விவசாய வருமானம் மூலமாக கிடைத்தது. இந்த வழக்கில் சொல்லி உள்ள கடனை எந்த

இடத்தில் வைத்து எப்போது கொடுத்தேன் என்றால் என்னுடைய வீட்டில் வைத்து 04.02.2022 அன்று காலை 10 மணி அளவில் கொடுத்தேன். எதிரி அன்றைய தினம் பள்ளி செல்வதற்கு முன்பே என்னிடம் வந்து பணம் வாங்கிக் கொண்டார்.

4. எதிரியோடு வேறு யார் யார் வந்திருந்தார்கள் என்றால் இரண்டு சாட்சிகள் வந்திருந்தார்கள். எதிரி மட்டும்தான் வந்தார் அந்த சாட்சிகள் இருவருக்கும் பொதுவான நபர்கள் ஆவார்கள். அந்த சாட்சிகளின் பெயர்களை நான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த சாட்சிகளின் பெயர்கள் பாண்டியன் மற்றும் சாரங்கபாணி என்பதாகும். பாண்டியன் தான் எழுதியதும் மற்றும் சாட்சி கையொப்பம் போட்டதும் ஆவார். மேற்படி கடன் கொடுத்தது பற்றி வேறு யாருக்கு தெரியும் என்றால் என் மனைவிக்கு தெரியும். என் மனைவிக்கு தெரியும் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. மேற்படி சாட்சி பாண்டியன் என்பவருக்கு ஊர் நடுவக்காடு என்றால் சரிதான். பாண்டியன் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 7 கிலோமீட்டர் தூரம் இருக்கும். சாரங்கபாடி வீட்டிற்கு என் வீட்டிற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் நான்கு கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருக்கும். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் பணம் எந்த வகை நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். எதிரி வரும்போது தனியாக தான் வந்தாரா என்றால் தனது இருசக்கர வாகனத்தில் தனியாக தான் வந்தார்.

6. எனக்கு சொந்தமாக இரண்டு ஏக்கரில் நிலம் உள்ளது என்று புகாரில் சொல்லி உள்ளேன் சரிதான். ஆனால் நான் நிறைய நிலங்களை குத்தகைக்கு சாகுபடி செய்வேன். 2 ஏக்கர் நிலத்தில் ரூ.21,00,000/- வருட வருமானம் வராது என்றாலும் நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் குத்தகைக்கு நிறைய நிலங்களை சாகுபடி செய்து வருகிறேன். அவ்வளவு தொகையையும் எதிரியே தனியாக இருசக்கர வாகனத்தில் எடுத்துச் சென்று விட்டாரா என்றால் ஆமாம்.

7. இந்த வழக்கு காசோலையை எதிரியை பூர்த்தி செய்து கையொப்பம் செய்தாரா என்றால் அவர் என்னிடம் வரும்போதே பூர்த்தி செய்து எடுத்து வந்து என் முன்னிலையில் அதில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தார். அதன்பிறகு எதிரியிடம் நான் எப்போதெல்லாம் பணத்தை திரும்பக் கேட்டேன் என்றால் அவரைப் பார்க்கும்போதெல்லாம் அவரது வீட்டில் வைத்தும் மற்றும்

பள்ளிக்கூடத்தில் வைத்தும் பணத்தை தரச் சொல்லி நிறைய முறை கேட்டு உள்ளேன். எதிரியின் தங்கை விஜயலட்சுமி என்பவருக்கு நான் வட்டிக்கு பணம் கொடுத்து அவர் எனக்கு அதனை திரும்ப செலுத்த தனது வீட்டையே விற்றுவிட்டு நாச்சியார் கோவில் சென்று செட்டில் ஆகிவிட்டார் என்றால் எனக்கு அது பற்றி எல்லாம் தெரியாது. அது தவறு.

8. இந்த வழக்கு காசோலை ரூ.10,00,000/-க்கு தான் அதிகபட்சம் செல்லுபடியாகும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி கொடுத்ததால் வாங்கி விட்டேன். நான் இந்த வழக்கு காசோலையை வேறு ஒரு நபரை வைத்து பூர்த்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. STC 4/2024 என்கிற காசோலை மோசடி வழக்கை பக்கிரி சாமி என்கிற நபர் மீது ரூ.5,00,000/-க்கு நான் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றாலும் அவ்வழக்கு இன்றைக்கு வாய்தாவிற்கு வந்தது என்றாலும் சரிதான். மேற்படி பக்கிரி சாமி வழக்கு காசோலையையும் இந்த வழக்கு எதிரி தான் பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால் இல்லை. இவ்வழக்கு காசோலை மற்றும் பக்கிரி சாமி வழக்கு காசோலை ஆகிய இரண்டையும் பூர்த்தி செய்தது ஒரே நபர் என்றாலும் மேற்படி இரண்டு காசோலைகளையும் ஒப்பிட்டு பார்த்தால் அந்த உண்மை தெரிந்து விடும் என்றாலும் சரியல்ல.

9. எந்த இடத்தில் வைத்து இந்த வழக்கில் சொல்லி உள்ள கடனை எதிரி கேட்டார் என்று என் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ் வழக்கில் குறியீடு செய்துள்ள புரோட்டில் ரூ.21,00,000/-க்கு எவ்வளவு ரூபாய்க்கு ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி புரோநோட்டு, இவ் வழக்கு காசோலை மற்றும் பக்கிரி சாமி வழக்கு காசோலை ஆகியவற்றில் காணப்படும் கையொப்பங்கள் ஒரே நபர் போடப்பட்டுள்ளது என்றால் தவறு. ரூ.21,00,000/- ஐ எத்தனை தவணைகளில் எதிரிக்கு கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் ஒரே தவணையில் கொடுத்தேன். எதிரி என்னிடம் கடன் வாங்கி இருந்தார் என்றாலும் அந்த அந்தக் கடனை திரும்ப செலுத்தி விட்டார் என்றாலும் நான் அவரிடம் கூடுதல் 10 பைசா வட்டி கேட்டு அவர் கொடுத்த புரோநோட் மற்றும் காசோலையை திரும்ப கொடுக்காமல் அவர் மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு காசோலையை ரூ.10,00,000/-க்கு மட்டும்தான் பூர்த்தி செய்ய முடியும் என்பது தெரிந்திருந்தும் நான் எதிரி ஆசிரியர் என்பதற்காக அவரை பழிவாங்க வேண்டும் என்கிற நோக்கோடு அதனை ரூ.21,00,000/- க்கு பூர்த்தி செய்து பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம்

ரூ.21,00,000/- கடன் வாங்கவில்லை என்றாலும் அவர் என் வசம் கொடுத்து வைத்திருந்த காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை சித்தரித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் அடிக்கடி எதிரியிடம் பணம் கேட்டு மிரட்டியதன் அடிப்படையில் எதிரி ஏற்கனவே எனக்கு கணக்கு தீர்த்து விட்டார் என்றாலும் நான் அவர் ஆசிரியர் என்பதால் அவரை அவமானப்படுத்தி பணியில் இருந்து நீக்க வேண்டும் என்பதற்காக விடாப்படியாக இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் உண்மையில் வட்டிக்கு பணம் கொடுத்து வருகிறேன் என்றாலும் அதற்கு சட்டரீதியான உரிமம் ஏதும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் ரூ.21,00,000/-க்கு வருமான வரி செலுத்தவில்லை என்றாலும் அது விவசாய வருமானம் என்பதால் வரி செலுத்தவில்லை.

10. எதிரி கௌரவமான ஆசிரியர் குடும்பத்தை சேர்ந்தவர் என்றாலும் நான் அவர் மீது கூடுதல் வட்டிக்கு ஆசைப்பட்டு பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு காசோலையை எதிரி பூர்த்தி செய்யவில்லை என்றாலும் நானே அதனை மற்றொரு நபர் மூலமாக பூர்த்தி செய்து கொண்டு பொய் வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**